**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**M.C.O.P.No.134/2022**

**<u>தேதி :16.02.2026</u>**

**(ம.சா.1 ) – திரு. சண்முகவேல்**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை :</u> (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

1. விபத்து சமயத்தில் எனக்கு 18 வயது பூர்த்தியாகவில்லை என்றும், அப்போது நான் இளவர் என்றும் சொன்னால் சரிதான். TN 63 H 4514 என்ற டெம்போ வேனை நான் தான் ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். அந்த வண்டிக்கு காப்பீடு, பதிவுச் சான்று இல்லை என்றும், எனக்கும் ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும் சொன்னால் சரிதான். பதிவுச் சான்று மற்றும் காப்பீடு இல்லாத நிலையிலும், எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையிலும் வாகனத்தை இயக்கக்கூடாது என எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தான் பதிவுச் சான்று, காப்பீட்டுச்சான்று, ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் TN 37 CH 5428 என்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகச் சொன்னால் சரியல்ல. விபத்தில் சம்மந்தப்பட்ட டெம்போ வேனின் உரிமையாளரை மனுவில் சேர்க்காததால் மனு பிழையுடையது என்றால் சரியல்ல.

2. வேல்மருத்துவமனையில் எனக்கு 10.03.2022 முதல் 18.03.2022 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை நடந்தது என்றால் சரிதான். ம.சா.ஆ.7 மருத்துவ பில்களின் இறுதி பில்லில் ரூ.1,55,000/–ல் பார்மசி மற்றும் இதர பில்களும் உள்ளடக்கியது என்றால் சரிதான். நான் 19.03.2022 க்கு பிறகு தொடர் சிகிச்சை பெற்றதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிளேட் எடுப்பதற்கு ரூ.40,000/– செலவாகும் என

கருத்துரை வழங்கிய மருத்துவர் எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அல்ல என்றால் சரிதான். நான் வேல் மருத்துவமனையில் தான் சிகிச்சை எடுத்தேன். வேல் மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் பிளேட்டை எடுக்க வேண்டுமென்றோ, தொடர் சிகிச்சை பெற வேண்டுமென்றோ கருத்துரை எதுவும் வழங்கியுள்ளாரா என்றால் வழங்கியுள்ளார். அவ்வாறான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயம் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையில் நான் ஓட்டுனர் வேலை பார்த்து மாதம் ரூ.15,000/– சம்பாதித்ததாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல. விபத்து சமயம் டாடா ஏசின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும், அதனால் மோட்டார் வாகனச் சட்டப்படி பாலிசி விதிமுறை மீறல் ஏற்பட்டுள்ளதால் 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2026.02.16 16:28:41 +0530

Additional Sub Judge,
Palani.